ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த

# ॥ மன்னு புகழ் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மன்னு புகழ் ॥

கண்ணபுரத்தொளிர் காகுத்தன் தாலாட்டு

‡மன்னு புகழ் கௌசலை தன்⋆ மணிவயிறு வாய்த்தவனே⋆
தென் இலங்கைக் கோன் முடிகள்⋆ சிந்துவித்தாய் செம் பொன் சேர்⋆
கன்னி நன் மா மதிள் புடை சூழ்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
என்னுடைய இன்னமுதே⋆ இராகவனே! தாலேலோ! (1)

புண்டரிக மலர் அதன் மேல்⋆ புவனி எல்லாம் படைத்தவனே⋆
திண் திறலாள் தாடகை தன்⋆ உரம் உருவச் சிலை வளைத்தாய்⋆
கண்டவர் தம் மனம் வழங்கும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
எண்டிசையும் ஆள் உடையாய்⋆ இராகவனே! தாலேலோ! (2)

கொங்கு மலி கருங்குழலாள்⋆ கௌசலை தன் குல மதலாய்⋆
தங்கு பெரும் புகழ்ச் சனகன்⋆ திரு மருகா தாசரதீ⋆
கங்கையிலும் தீர்த்த மலி⋆ கணபுரத்தென் கருமணியே⋆
எங்கள் குலத்தின் அமுதே⋆ இராகவனே! தாலேலோ! (3)

தாமரை மேல் அயன் அவனைப்⋆ படைத்தவனே⋆ தயரதன் தன்
மாமதலாய்⋆ மைதிலி தன் மணவாளா!⋆ வண்டினங்கள்
காமரங்கள் இசை பாடும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
ஏமருவும் சிலை வலவா⋆ இராகவனே! தாலேலோ! (4)

பார் ஆளும் படர் செல்வம்⋆ பரத நம்பிக்கே அருளி⋆
ஆரா அன்பிளையவனோடு⋆ அருங்கானம் அடைந்தவனே⋆
சீர் ஆளும் வரை மார்பா⋆ திருக் கண்ண புரத்தரசே⋆
தார் ஆளும் நீண் முடி⋆ என் தாசரதீ! தாலேலோ! (5)

சுற்றம் எல்லாம் பின் தொடரத்⋆ தொல் கானம் அடைந்தவனே⋆
அற்றவர்கட்கரு மருந்தே⋆ அயோத்தி நகர்க்கதிபதியே⋆
கற்றவர்கள் தாம் வாழும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
சிற்றவை தன் சொற் கொண்ட⋆ சீராமா! தாலேலோ! (6)

www.prapatti.com

ஆலின் இலைப் பாலகனாய்⋆ அன்றுலகம் உண்டவனே⋆
வாலியை கொன்றரசு⋆ இளைய வானரத்துக்களித்தவனே⋆
காலின் மணி கரை அலைக்கும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
ஆலி நகர்க்கதிபதியே⋆ அயோத்திமனே! தாலேலோ! (7)

மலை அதனால் அணை கட்டி⋆ மதிள் இலங்கை அழித்தவனே⋆
அலை கடலைக் கடைந்து⋆ அமரர்க்கமுதருளிச் செய்தவனே⋆
கலை வலவர் தாம் வாழும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
சிலை வலவா சேவகனே⋆ சீராமா! தாலேலோ! (8)

தளை அவிழும் நறுங்குஞ்சித்⋆ தயரதந் தன் குல மதலாய்⋆
வளைய ஒரு சிலை அதனால்⋆ மதிள் இலங்கை அழித்தவனே⋆
களை கழுநீர் மருங்கலரும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
இளையவர்கட்கருள் உடையாய்⋆ இராகவனே! தாலேலோ! (9)

‡தேவரையும் அசுரரையும்⋆ திசைகளையும் படைத்தவனே⋆
யாவரும் வந்தடிவணங்க⋆ அரங்க நகர்த் துயின்றவனே⋆
காவிரி நல் நதி பாயும்⋆ கணபுரத்தென் கருமணியே⋆
ஏவரி வெஞ்சிலை வலவா⋆ இராகவனே! தாலேலோ! (10)

‡கன்னி நன் மா மதிள் புடை சூழ்⋆ கணபுரத்தென் காகுத்தன்
தன் அடிமேல்⋆ தாலேலோ என்றுரைத்த⋆ தமிழ் மாலை⋆
கொல் நவிலும் வேல் வலவன்⋆ குடைக் குலசேகரன் சொன்ன⋆
பன்னிய நூல் பத்தும் வல்லார்⋆ பாங்காய பத்தர்களே (11)

‖ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com